IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.V
(Chapter XXIII Code of Criminal Procedure)
TIRUNELVELI.

| | | |
|---|---|---|
| Case Number | : | STC .No.4486/2022 |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | பச்சைமால் |
| Father's/Husband's Name | : | பெருமாள் |
| Village | : | மீனவன்குளம் |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, this **5.12.2024**

<u>முதல் விசாரணை</u> :–

(சாட்சி நீதிமன்ற காவலரால் அடையாளம் காட்டப்பட்ட பிறகு முதல் விசாரணை செய்யப்படுகிறது)

1) நான் மீனவன்குளத்தில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது மூத்த மகள் பெயர் பிரம்மசக்தி. விபத்து நடந்த காலத்தில் எனது மகள் திருநெல்வேலியில் நீட் தேர்வுக்காக பயிற்சி வகுப்பில் படித்து வந்தார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நானும் எனது மகள் பிரம்மசக்தி என்பவளும் நீட் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு எனது மகளை கொண்டு விடுவதற்காக அன்று மதியம் 1.30 மணியளவில் எனது கீரோஹாண்டா இருசக்கர வாகனம் எண். டிஎண்72எவி6100 என்ற பைக்கில் நான் ஓட்ட பின்புறம் எனது மகள் பிரம்மசக்தியை உட்கார வைத்து கொண்டு தெற்கு மீனவன்குளத்தில் இருந்து பாளையங்கோட்டை வரும் வழியில் ரோஸ்மேரி கல்லூரிக்கு அருகில் பாளையங்கோட்டைக்கு வரும் வழியில் மதியம் 2.00 மணியளவில் மேற்படி கல்லூரிக்கு முன்பாக வந்து கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரி காரை நிறுத்தியிருந்தவர் பின்புறமாக ரிவர்ஸ் எடுத்து வந்த போது எனது இருசக்கர வாகனத்தின் முன்புறமாக இடித்ததில் நாங்கள் கீழே விழுந்து

எனக்கு மணிகட்டு மற்றும் முன்கையில் எலும்பு முறிவு காயமும் நெற்றியில் காயமும் ஏற்பட்டது. எனது மகளுக்கு வலது கால் முட்டியில் காயம் ஏற்பட்டது. பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் TVMC மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். பின்பு மேல்சிகிச்சைக்காக நாகர்கோவிலில் உள்ள சுஸ்ரூதா தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்து உள்நோயாளியாக சிகிச்சையில் இருக்கும் போது என்னை விசாரித்து நாங்கள் சொன்னதை புகார் எழுதிகொண்டார்கள். பின்பு புகாரில் கைரேகை போட்டு கொடுத்தேன். எனது வலது கையில் ஆபரேசன் செய்து இருந்ததால் இடது கை பெருவிரல் ரேகை வைத்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். (**மேற்படி புகார்வாக்குமூலம் அசாஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

1) நான் 8ம்_வகுப்பு வரை படித்துள்ளேன். எனது இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் எனது கையில் தான் உள்ளது. எனக்கு இருசக்கரம் வாகனம் ஓட்டுவதற்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் இருக்கிறது. நான் அன்று தலைகவசம் எதுவும் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையானது இரண்டு வாகனங்கள் வந்து செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் முன்னால் சென்ற கார் பின்னோக்கி வந்து இடித்துவிட்டதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையானது வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். நீட் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு எத்தனை மணிக்கு செல்லவேண்டும் என்றால் காலை 8.00 மணிக்கு செல்லவேண்டும்.

2) அன்றைய தினம் விபத்து நடந்து விட்டதால் நீட் தேர்வுக்கு செல்லவில்லை. நான் மருத்துவமனையில் வைத்து போலிசாரிடம் எத்தனை பேப்பரில் கைரேகை வைத்து கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் ரேகை வைத்து கொடுத்த பேப்பரில் என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் போலிசார் அதை படித்து காண்பித்தார்கள். போலிசார் முன்னால் சென்ற வாகனம் பின்னோக்கி வந்து இடித்து விட்டதாக எழுதிதான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னுடன் எனது மகளும் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் உள்ள நபர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். அருகில் உள்ளவர்கள் தகவல் சொல்லி போலிசார் அந்த இடத்திற்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான்.

3) போலிசார் வந்த பிறகு தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். போலிசார் அந்த இடத்தில் போட்டோ மற்றும் வீடியோ எடுத்தார் என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து போலிசார் என்னிடம் கேட்டு எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து நான் கையொப்பம் போடவில்லை. நான் சொன்ன நாள் நேரத்தில் விதத்தில் விபத்து நடந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது மகளை நீட் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு அவசரமாக கொண்டு செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் நான் அதிவேகமாக அஜாகிரதையாக இருசக்கர வாகனத்தில் ஓட்டி சென்று முன்னால் சென்ற காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது அஜாக்கிரதையும், அதிவேகமும் தான் காரணம் என்றால் சரியல்ல.

4) விபத்து நடந்த காலத்தில் அந்த இடத்தில் பாலம் வேலை நடைபெற்றது என்றால் சரிதான். பாலம் வேலை நடந்து கொண்டிருந்ததால் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மெதுவாக தான் செல்லும் என்றால் சரிதான். நான் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தால் அதற்கு அனுசரணையாக

போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல.